**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**24 ஜூன் 2016 / 19 ரமதான் 1437**

# ரமதான் மாதத்தின் கடைசி இரவுகளை பிரகாசிக்கச் செய்தல்

اَلْحَمْدُ للهِ الَّذي أَنْزَلَ الفُرْقَانَ وَ أَيَّدَ النَّاسَ بالحِكْمَةِ وَ البَيَان، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ شَهِدَ لِنَفْسِهِ الْوَحْدَانِيَّةَ وَ الإِحْسَان وَشَهِدَ بِهِمَا مَلاَئِكَتُهُ وَ الثَّقَلاَن، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ المَبْعُوثُ بالرَّحْمَةِ وَ الرِّضْوَان ، اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا.أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத் தார்களே!

ரமதான் மாதத்தின் ”பரக்கத்கள்” (அபிவிருத்திகள் மற்றும் வளங்களை) அறுவடை செய்வதற்கு வாய்ப்பளித்த எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நமது நன்றிகளைத் தெரிவித்துக்

கொள்கிறோம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நீண்ட ஆயுளை வழங்குவானாக! நமது உள்ளங்களில் "தக்வா" (அல்லாஹ்வின் மீதான பக்தி), ஈமான் (அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை) ஆகியவை உறுதியாக அல்லாஹ் உதவி செய்வானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

நேற்று தான் அருள்மிக்க ரமதான் மாதத்தில் நாம் காலடி எடுத்து வைத்தது போன்றும், இன்று, திடீரென அம்மாதத்தின் முக்கால் பகுதி கடந்து விட்டதைப் போன்றும் நாம் உணர்கிறோம். நாம் உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி, ரமதான் மாதத்தின் கடைசி பத்து இரவுகளைத் தவிர வேறு எதுவும் இனி நம்மிடம் இருக்கப் போவதில்லை என்பது உண்மை. புனிதமிக்க இம்மாதத்தின் தினங்கள் மிக விரைவாக நம்மை விட்டும் கடந்து விடுவதால், இம்மாதத்தில் காணப்படும் அரிய வாய்ப்புகளாகிய பாவமன்னிப்பு தேடுதல், பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டும் நம்மை நாம் பரிசுத்தமாக்கிக் கொள்ளுதல் போன்றவற்றை மிக விரைவாகச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

ரமதான் மாதத்தின் கடைசி பத்து இரவுகளில் மிகச் சிறந்த இரவு ஒன்று காணப்படுவதாகவும், அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவு எனவும், அது "லைலத்துல் கத்ரு" இரவாகும் எனவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-கத்ர்" எனும் அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

إِنَّا أَنزَلْنَٰهُ فِى لَيْلَةِ ٱلْقَدْرِ ﴿١﴾ وَمَآ أَدْرَىٰكَ مَا لَيْلَةُ ٱلْقَدْرِ ﴿٢﴾
لَيْلَةُ ٱلْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ ﴿٣﴾ تَنَزَّلُ ٱلْمَلَٰٓئِكَةُ وَٱلرُّوحُ فِيهَا
بِإِذْنِ رَبِّهِم مِّن كُلِّ أَمْرٍ ﴿٤﴾ سَلَٰمٌ هِىَ حَتَّىٰ مَطْلَعِ ٱلْفَجْرِ ﴿٥﴾

பொருள்: நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம். மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும், ஆன்மாவும் (ஜிப்ரீலும்) தம் இறைவனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர். அந்த இரவில் சாந்தி (நிலவியிருக்கும்); அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும்.

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் மிகவும் மேலானவன்; பரிசுத்தமானவன்). அந்த இரவின் சிறப்புகளை அடைவதில் வெற்றி காண்போருக்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து எவ்வளவு சிறந்த வெகுமதிகள் வழங்கப்படுகின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! அம்மாதத்தில் வணக்க வழிபாடுகளைப் புரிவதானது, ஆயிரம் மாதங்கள் அதாவது 83 ஆண்டுகளில் புரியப்படும் வணக்க வழிபாடுகளை விடச் சிறந்ததாக உள்ளது. 83 ஆண்டுகள் நம்மால் வாழ முடியுமா என்பது நமக்குத் தெரியாது. மேலும் நமது பாவங்களும் தவறுகளும் மலைகளைப் போல் குவிந்து காணப்படலாம். எனவே, குறிப்பாக, புனிதமிக்க இந்த ரமதான் மாதத்தில் காணப்படும் அரிய வாய்ப்புகளாகிய பாவமன்னிப்புத்

தேடுதல், அல்லாஹ்வின் கிருபையை அடைதல் போன்ற முயற்சிகளைச் செய்யாமல் இம்மாதத்தை வீணாக்கி விடக்கூடாது. நபி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

وَمَنْ قَامَ لَيْلَةَ الْقَدْرِ إِيْمَاناً وَاحْتِسَاباً غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِه

பொருள்: எவர் ஒருவர், ஓரிறை நம்பிக்கையுடன், நன்மையைக் கருதி லைலத்துல் கத்ர் இரவில் நின்று வணங்கினாரோ அவரது கடந்த காலப் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ்)

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் நாம் தாமதமாகத் திரும்புகின்றோமே, நம்மை நாம் சீராக்கி, மாற்றிக் கொள்ளத் தாமதமாகி விட்டதே எனக் கருதி தயங்கிக் கொண்டிருக்க வேண்டாம். இன்றைய தினத்தை விட நாளைய தினம் சிறப்பாக இருக்க வேண்டும்; இன்றைய தினம், நேற்றைய தினத்தை விடச் சிறப்பாக இருக்க வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொண்டு நம்மை சீராக்கிக் கொள்ளும் முயற்சியை இன்றே நாம் துவங்கலாம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா உடனான நமது உறவை ஒருபோதும் முறிக்க முற்படாதீர்கள்.

நமது தொழில்கள், வாழ்க்கையில் நமக்குள்ள பொறுப்புகள் போன்றவற்றில் நாம் எவ்வளவு தான் அலுவல்மிக்கவர்களாக இருப்பினும், நாம் சம்பாதிக்கும் ”ரிஸ்க்” எனும் வாழ்வாதாரம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து

தான் நமக்கு வழங்கப்படுகின்றன என்பதை நாம் உணர்வது அவசியமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் எப்போதும் நாம் நெருக்கமாக இருப்பதற்கும், அல்லாஹ் எப்போதும் நம் பக்கம் நெருக்கமாக இருப்பதற்கும் நாம் கடின முயற்சி செய்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை நோக்கி நாம் செல்லும் பாதை மிகவும் நேராகவும் தெளிவாகவும் உள்ளதை நாம் அறிய வேண்டும். அல்லாஹ்வின் பக்கம் நாம் திரும்ப வேண்டும்; அவனிடம் பாவமன்னிப்புத் தேட வேண்டும் எனும் விருப்பத்தை எப்போது நமது உள்ளங்களில் நாம் உணர்கின்றோமோ, அப்போதே அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் நம்மை நெருக்கமாக்கிக் கொள்ளும் நமது பயணம் துவங்கி விட்டது என்பதை நாம் அறியலாம். ஹதீது குத்ஸியில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகின்றான்:

وَإِنْ تَقَرَّبَ إِلَيَّ ذِرَاعًا تَقَرَّبْتُ إِلَيْهِ بَاعًا ، وَإِنْ أَتَانِي يَمْشِي أَتَيْتُهُ هَرْوَلَةً

பொருள்: என் அடியார் என் பக்கம் ஒரு முழம் அளவு நெருங்கி வந்தால் நான் அவன் பக்கம் இரு கைகளின் நீட்டளவு நெருங்கி வருகிறேன். என் பக்கம் அவன் நடந்து வந்தால் நான் அவன் பக்கம் ஓடிச் செல்வேன். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

எனவே, குறிப்பாக, எதிர் வரும் ரமதான் மாதத்தின் கடைசி பத்து இரவுகளில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா உடனான நமது உறவை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென நினைத்து, அதற்கான முயற்சிகளை

மேற்கொள்ள வேண்டும். கடைசி பத்து இரவுகளில் நமது நற்காரியங்களையும் வணக்க வழிபாடுகளையும் அதிகரிப்பதன் மூலம் அரிய வாய்ப்பாகிய ”லைலத்துல் கத்ர்” இரவை அடைய வேண்டும் என்பதை மறந்து விட வேண்டாம். அந்த இரவில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் ஒவ்வொரு அடியாருக்கும் அல்லாஹ்வின் பாவமன்னிப்பும் அவனது கிருபையும் வழங்கப்படுகிறது.

ஜமாஅத்தார்களே!

இவ்வுலகில் இந்த ரமதான் மாதம் நமது இறுதி ரமதான் மாதமாக இருக்கலாம். நாமும் நமது குடும்பத்தார்களும் அடுத்த ரமதானில் நோன்பு பிடிக்கவும், தராவீஹ் மற்றும் இதர தொழுகைகளை இணைந்து தொழுகவும் ஆற்றல் பெறுவோமா, பெற மாட்டோமா என்பதை நாம் அறிய மாட்டோம். எனவே நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதில் நாம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது போல் ”லைலத்துல் கத்ர்” இரவு மற்றும் ரமதான் மாதத்தின் சிறப்புகளை அடைவதில் நாம் அதிக ஆர்வத்துடன் காணப்பட வேண்டும். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் செயல்பாடுகளை நாம் ஆர்வத்துடன் பின்பற்ற வேண்டும். ”லைலத்துல் கத்ர்” இரவைத் தேடுவதற்காகவும், வணக்க வழிபாடுகளைப் புரிவதற்காகவும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ரமதான் மாதத்தின் இரவுப் பொழுதுகளில் தனது குடும்பத்தார்களை தூக்கத்தை விட்டும் எழுப்புபவர்களாக இருந்தார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

ரமதான் மாதத்தில், ஆன்மீக ரீதியில் நம்மை நாம் பரிசுத்தமாக்கிக் கொள்வது போல் ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் ஜகாத் வழங்குவதன் மூலம் நமது பொருளையும் பரிசுத்தமாக்கக் கடமைப்பட்டுள்ளோம். நம்மிடமுள்ள சொத்துக்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்பட்டுள்ள வெகுமதிகள் ஆகும் என்பதையும், அந்த சொத்துக்கள் நம்மிடம் ஒரு ஆண்டு முழுவதும் காணப்படுமாயின், ஜகாத் கொடுக்கும் அளவு அது இருக்குமாயின் அதற்கான "ஜகாத்" கொடுப்பதை அல்லாஹ் நம்மீது கடமையாக்கியுள்ளான் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது "ரிஸ்க்" எனும் வாழ்வாதாரத்திலும் செல்வத்திலும் அல்லாஹ்வின் "பரக்கத்" (அபிவிருத்திகளை, வளங்களை) நாம் அடைவதற்கு ஜகாத் கொடுப்பதும் ஒரு வழிமுறையாகும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது ஆன்மாக்களை "ஈமான்" மூலம் பலப்படுத்துவோமாக! நமது உள்ளங்களை "தக்வா" (இறை பக்தியால்) நிரப்புவோமாக! புனிதமிக்க இம்மாதத்தில் இறுதி பத்து தினங்களில் துஆக்கள் (பிரார்த்தனைகள்) செய்வதை அதிகரித்துக் கொள்வோமாக! நமது உள்ளங்களையும் செல்வங்களையும் பரிசுத்தமாக்கிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு வழங்கி அருள் புரிவானாக! அதன் மூலம் இம்மையிலும் மறுமையிலும் நமக்கு அமைதியும் அபிவிருத்தியும் வழங்கப்படட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

யா அல்லாஹ்! ”லைலத்துல் கத்ர்” இரவின் அதிபதியே! அப்புனிதமிக்க இரவின் சிறப்புகளை அடைவதற்கான பாக்கியத்தை எங்களுக்கும் எங்கள் குடும்பத்தார்களுக்கும் வழங்கி அருள் புரிவாயாக! எங்கள் மற்றும் எங்கள் குடும்பத்தார்களின் அந்தஸ்த்தை உன் பார்வையில் உயர்த்துவாயாக!

யா ரஹீம்! யா லதீ்ஃப்! இந்த ரமதான் மாதம் எங்களது இறுதியான ரமதான் மாதமாக இருக்குமெனில் நீ எங்களின் பாவங்களையும் தவறுகளையும் மன்னிக்காத வரை எங்களை விட்டும் இம்மாதத்தை கடந்து விடச் செய்யாதே! எங்களது குடும்பத்தாருடன் இருக்கும் பாக்கியம் இந்த ரமதானுடன் முடிந்து விடுமெனில் மறுமையில் எங்கள் அனைவரையும் உனது சொர்க்கத்தில் இணைத்து வைப்பாயாக!

யா ஹலீம்! யா அளீம்! உன் மீதான அன்பையும், உன்னையும் அடுத்த ரமதான் மாதத்தையும் சந்திக்க வேண்டும் எனும் ஆர்வத்தையும் எங்கள் உள்ளங்களில் ஏற்படுத்துவாயாக! ரமதான் மாதம் முடிந்த பின்பும் கூட நற்காரியங்கள் மற்றும் வணக்க வழிபாடுகளைத் தொடர்ந்து புரிவதில் ”இஸ்திகாமத்” (நிலையான தன்மையை) எங்களுக்கு வழங்குவாயாக! ரமதானின் பிந்திய பத்து தினங்களை நாங்கள் பிரகாசிக்கச் செய்வதற்காக எங்கள் உள்ளங்களை ஈமானால் பிரகாசிக்கச் செய்வாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.